B

**அறிவித்தல்**

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்குட்படுத்தப்பட்ட "தகவலுக்கான உரிமை" எனும் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்கு கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

இச்சட்டமூலத்தின் வாசகம் 5 (1) (ஒ) அரசியலமைப்பின் 3, 4, 12(1) மற்றும் 14அ(2) ஆம் உறுப்புரைகளைமீறுவதனாலும்

வாசகம் 9 (2) (அ) அரசியலமைப்பின் 3, 4, 12(1) மற்றும் 14 ஆம் உறுப்புரைகளைமீறுவதனாலும்

வாசகம் 19 அரசியலமைப்பின் 3,4,12(1) மற்றும் 55 ஆம் உறுப்புரைகளைமீறுவதனாலும்

வாசகங்கள் 43 (ஒ) மற்றும் 43 (ஓ) அரசியலமைப்பின் 3, 4, மற்றும் 14அ ஆம்உறுப்புரைகளைமீறுவதனாலும்

இச்சட்டமூலம்அதன் தற்போதைய அமைப்பில்அரசியலமைப்பின்84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கமைவாக விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மட்டுமே நிறைவேற்றப்படலாம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டுள்ளவாறு மேற்படி வாசகங்கள் திருத்தப்படுமாயின் மேற்குறிப்பிடப்பட்ட முரண்பாடுகள் நீங்குவதாகவும் சட்டமூலம் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படலாம் எனவும் உயர்நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிடுமாறு நான் கட்டளையிடுகின்றேன்.